இலங்கை மத்திய வங்கி - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் (“வங்கி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(1) மற்றும் 2023 இன் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 101 பிரிவு என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இக்கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கியொழுகுதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

வங்கியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (IFRSs) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISAs) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் ஆளும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆளும் குழுவுக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2023 ஏப்ரல் 20 இல் வங்கியால் வழங்கப்பட்ட செய்திக்குறிப்பு பிரகாரம் ரூபா 5 மில்லியன் காசு கட்ட குறைவு (ரூபா 5000 நாணயத் தாள்) 2023 ஏப்ரல் 11 இல் நாணய செயற்பாடுகளின் போது மத்திய வங்கியின் பெட்டகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் உள்ளக விசாரணை உடனடியாக தொடங்கப்பட்டதுடன் கோட்டை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த காசுக் கட்டுக்களின் குறைவிற்காக இன்னமும் எந்தத் தரப்பினரும் பொறுப்பேற்கவில்லை.	உள்ளக விசாரணை நடாத்தப்பட்டிருந்ததுடன் அதிகமான பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தது. உள்ளக விசாரணைப்படி CBSL குறைவிற்காக பொறுப்புடைய நபரை இனங்காண்பதற்கான நிலைமை இருக்கவில்லை. மேலும் இரண்டு தனித்தனியான விசாரணைகள் CIABOC மற்றும் CID ஆல் நடாத்தப்பட்டிருந்தது.	இருக்கின்ற பரிந்துரைகளின் அமுலாக்கல் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் பொறுப்புடைய நபர் (கள்) இனங்கண்டு பொறுப்பு கூற வைத்திருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 பொதுவான IT கட்டுப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**காலாவதியான தகவல் பாதுகாப்பு கொள்கை (பதிப்பு 5.0)** இலங்கை மத்திய வங்கி 2022 ப்பெரவரியில் திரும்பவும் மீளாய்வு செய்யப்பட்டிருந்த தகவல் பாதுகாப்பு கொள்கை பதிப்பு 5.0	நாளதுவரையாக்கிய தகவல் பாதுகாப்பு கொள்கை (பதிப்பு 6) 2025 ஒக்தோபர் 1 இல் தகவல் தொழில்நுட்ப மேற்பார்வை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அளுகை சபையால் அனுமதியன்	தகவல் பாதுகாப்பு கொள்கை நாளது வரையாக்க வேண்டியதுடன் மேலும் தாமதமில்லாமல் அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் தாமதமில்லாமல் அனுமதிக்கப்பட வேண்டும்.

	இன் கீழ் செயற்படுகின்றது. தற்போதைய கொள்கை (i) சலுகை பெற்ற பயனாளர் கணக்குகளின் கண்காணிப்பு நடைமுறை (ii) பயனாளர் கணக்கு திறத்தலும் செயலிழக்க செய்தலிற்கான வழிகாட்டல் மற்றும் (iii) விற்பனையளர் தொடர்பான ஆபத்துக்களின் முகாமைத்துவம் போன்றன. அந்த ஏற்பாடுகளின்மை அனுமதியற்ற நுழைவுகள், மோசடி, தரவு மீறல்கள், இணக்க மீறல்கள் மற்றும் ஆபத்தான வியாபார நடைமுறையின் இடையூறுகள் போன்றவறறின் ஆபத்தினை அதிகரிக்கின்றது. இருப்பினும் நாளதுவரையாக்கிய கொள்கை கட்டமைப்பில்லாமல் பங்குதாரர் முறையான வழிநடத்தல் பொறுப்புக்கூல், நிதி மற்றும் தரவு மற்றும் வியாபார பயன்பாடுகளின் இரகசயத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் கிடைக்கும் தன்மையை செய்யக் கூடியதாக இருக்கும்.	பெயரில் செயற்படுத்தப்படும். 2022 ஆம் ஆண்டிலிருந்து இத்திகதி வரையான காலத்தின் பொது CBSL ஆனது பிரதம தகவல் பாதுகாப்பு உத்தியோகத்தர் (CISO) ஒருவரை சேர்ப்பதன் மூலம் சைபர் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்தியிருந்தது. சைபர் பாதுகாப்பு கட்டமைப்பை தயாரத்தல், சிறப்பு நுழைவு கண்காணிப்பு முறைமையை அமுலாக்குதல் மற்றும் நிகழ்வுகள் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் கொள்வனவு தொடங்குதல் மேலும் SWIFT CSP இலிருந்தான பரிந்துரைகள், TechCERT ஆல் நடாத்தப்பட்ட ஆலோசணையாளர் மதிப்பீடு அமுலாக்கப்பட்டது. உருவாக்க சைபர் நிகழ்வு பொறுப்பு பயிற்சி TechCERT ஆல் அளிக்கப்பட்டது. ஸ்பான் மற்றும் பீசிங் சம்பவங்களை புகாரளிப்பதற்கான ஒரு பிரத்தயெக ஈ மெயில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் அடையாளம் காணப்பட்ட பாதுகாப்பு நிகழ்வுகளை உடனடியாக குறைப்பதற்காக சுற்றியுள்ள பாதுகாப்பு மீளாய்வு கருவிகளின் வழக்கமான கண்காணிப்பு தொடங்கப்பட்டுள்ளது.	சலுகைபெற்ற நுழைவு, பயனாளர் கணக்கு முகாமைத்துவம் மற்றும் விற்பனையாளர் ஆபத்து தொடர்பான சகல முக்கியமான பகுதிகளும் பேதியளவு வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	**தரவு கசிவு பாதுகாப்பிற்கான பொறிமுறையின்மை.** வங்கியானது உள்வாரி மற்றும் வெளிவாரி இரண்டினதும் அனுப்பப்படும் முக்கியமான தகவல்களை பாதுக்க உரிய நேர கண்காணிப்பு பொறிமுறையை கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அத்கயை வழிமுறை இல்hத நிலையில் வங்கி வேண்டுமென்றே மற்றும் தற்செயலாக தரவு கசிவு ஏற்படும் ஆபத்திற்கு ஆளாகின்றது. இதன்விளைவால் இரகசியத் தன்மை அனமதிக்கப்படாத தரப்பினருக்கு அனுப்பப்படலாம் இந்த பலவீனம் தரவு மீறல்கள் ஒழுங்குமுறை இணக்கமின்மை, நன்மதிப்பு சேதம் மற்றும் பங்குதாரர் நம்பிக்கை இழப்பு என்பவற்றின் ஆபத்தை அதிகரிக்கின்றது. ஏனெனில் முக்கியமான வியாபார தகவல்கள் மற்றும் தனிப்பட்ட தரவுகள் போதுமானளவு பாதுகாக்கப்படாமல்	CBSL ஆனது டிஜரல் உள்ளடக்கம் மற்றும் முகாமை இறுதியாக்கலில் மைக்றோசொப்ற் மூலம் வகைப்பாட்டை செயற்படுத்துவதன் மூலம் அளவீடுகளை விரிவான தரவு கசிவு பாதுகாப்பு (DLP) அமுலாக்கலை தொடங்கியிருந்தது. இணைய தளம் மற்றும் பிரயோக கட்டுப்பாடு கொள்கைகள் பகிர்வை கட்டுப்படுதத பயவோல்ஜ்சில் வலையமைப்பு மற்றும் பயன்பாட்டுக் கஙள்கைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் அனுமதிக்கப்பட்ட செவைகளிற்கு தரவுகளை மாற்ற கொள்கை வரையறுக்கப்பட்டது. வலையமைப்பு பிரிவு மற்றும் வலயம் உள்ளக தரவு வெளிப்படுத்தலை வரையறுக்கின்றதுடன் இது கடைசி சந்தர்ப்பமாக இருந்தது. மேலும், ஆதார முறைகைள் மற்றும் உட்கட்டமைப்பு செயற்பாட்டிலுள்ள SIEM கொள்வனவுடன் அமுலாக்குகின்றது. அச்சுறுத்தல் கண்டறிதல் மற்றும் DPL நிகழ்வுகளின் பகுப்பாய்வு	சரியான நேர கண்காணிப்பு பொறிமுறையுடன் விரிவான தரவு கசிவு பாதுகாப்பு (DLP) முழுமையாக அமுலாக்கப்பட வேண்டியதுடன் அனுமதிக்கப்படாத தகவல் பரிமாற்றத்தின் வினைத்திறனான வெளிப்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

	போகலாம்.	தொடர்ச்சியான கண்காணிப்பை உறுதிப்படுத்துவதற்கு 24x7 SOC சேவை செயற்பாட்டில் உள்ளன.	
(இ)	அத்தகைய வழிமுறை இல்லாத நிலையில் வங்கி வேண்டுமென்றே மற்றும் தற்செயலாக தரவு கசிவு ஏற்படும் ஆபத்திற்கு ஆளாகின்றது. இதன் விளைவாக இரகசிய தகவல்கள் அனுமதிக்கப்படாத தரப்பினரருக்கு அனுப்பப்படாலாம் இந்த பலவீனம் தரவு மீறல் நடைமுறை இணக்ககமின்மை நன்மதிப்பு சேதம் மற்றும் பங்குதாரர் நம்பிக்கை இழப்பு ஆகியவற்றின் ஆபத்தை அதிகரிக்கின்றது ஏனெனில் முக்கியமான வியாபாரத் தகவல் மற்றும் தனிப்பட்ட தரவு போதுமான அளவு பாதுகாக்கப்படாமல் போனது.	AS400 – ஓய்வுதியம், eHRNet மற்றும் LGS முறைமைகளிற்கான ஆபத்து மீட்பு (DR) வங்கி கொண்டுள்ளது. மேலும் 2013 முதல் DR தடயத்திற்கு பிரதியெடுக்கப்படுகிறது.	இடையூறுகளின் போது னுசு ஏற்பாடுகளின் செயலாற்றல் முக்கியமான செயற்பாடுகளின் தொடர்ச்சியையும் உறுதி செய்தற்காக - AS400 ஓய்வூதியம் eHRNet மற்றும் LGS முறைமைகளிற்கு அவ்வப்போது ஆபத்து மீட்பு (DR) பயிற்சிகள் நடாத்தப்பட வேண்டும்.
(ஈ)	**iGLAS, சிம்கொரப், NRMS, RTGS, CIMM, CMS, CMS EDI, OEBS, AS400 – ஓய்வூதியம், eHRNet, LSS, FLMS, LGS மற்றும் OMO SYS மறைமை பயனானர் நுழைவு கருத்தரைகள, கணனியால் உருவாக்கப்பட்ட மாற்ற பதிவுகள் மற்றும் சலுகை பெற்ற பயனாளர் கணக்கு கண்காணிப்பு செயற்பாடின்மை** iGLAS, சிம்கொரப், NRMS, RTGS, CIMM, CMS, CMS EDI, OEBS, AS400 – ஓய்வூதியம், eHRNet, LSS, FLMS, LGS மற்றும் OMO SYS உள்ளிட்ட முக்கியமான முறைமைகள் மீது வங்கி முக்கிய பொதுவாக IT கட்டுப்பாடுகளை செயற்படுத்தாமை குறிப்பதக **(i)** அணுகுதல் ‘‘உரிமைகளை தெரிந்து கொள்ளல் வேண்டிய மற்றும் ‘‘செயய வேண்டிய வேண்டிய அடிப்படையில் கட்டாயம் வழங்கப்படுவதை உறுதி செய்ய அவ்வவ்போது பயனாளர் / நுழைவு மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. (ii) இந்த முறைமைகள் செய்ய வேண்டிய சகல மாற்றங்களும் கண்காணிக்கவும் நிரூபிக்கவும் கணனியால் உருவாக்கப்பட்ட மாற்றப் பதிவுகள் பேணப்படவில்லை. மேலும் (iii) பயன்பாடு, தரவு மற்றும் செய்றபாட்டு முறைமை	2026 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் CBSL ஆல் அவ்வப்போது பயனாளர் நுழைவு மீளாய்வுகளை மேற்கொள்ளப்டும். புதிதாக வேலைக்கமர்த்தப்பட்டவர்கள் (ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்கள) அவர்களின் ஏனைய கடமைகளிற்கு மேலதிகமாக இந்த பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் முறையையால் உருவாக்கப்பட்ட பரிமாற்ற பதிவுகள் இல்லாதுவிடினும் ஆபத்தினை குறைப்பதற்கு iGLAS, SimCorp, NRMS, RTGS, CIMM, CMS, CMS EDI, OEBS, AS400 – ஓய்வூதியம், eHRNet, LSS, FLMS, LGS மற்றும் OMO SYS உள்ளடங்கிய முறைமைகளிற்கு கையொப்பங்களுடன் வகுதிப்படுத்தப்பட்ட கையேடு படிவங்களை பயன்படுத்தி வங்கி சரியான மாற்ற கோரிக்கை நடைமுறையை பின்பற்றியது. இந்த காலாண்டில் சலுகைபெற்ற நுழைவு கண்காணிப்பு முறைமை (PAM) செயற்படுத்தப்படும்.	கணனி நுழைவு மாற்றங்கள் மற்றும் சலுகை பெற்ற செயற்பாடுகள் மீது வினைத்திறனான கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்கு அவ்வப்போது பயனாளர் நுழைவு மதிப்பாய்வகள், கணனி உருவாக்கிய பதிவு மாற்றங்கள் மற்றும் கணக்கு கண்காணப்பு ஆகியவற்றினை முழுமையாக செயற்படுத்த தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

	நிலைகளில் சலுகை பெற்ற பயனாளர் கணக்கு கண்காணிப்பு செயற்பாடுகளை தாபிக்கப்பட்டிருககவில்லை. இந்த முக்கியமான கட்டுப்பாடுகள் இல்லாமையால் அனுமதிக்கப்படாத நுழைவு, அடையாளம் காணப்படாட முறைமை மாற்றங்கள் சலுகை பெற்ற உரிமைகளை தவறாக பன்படுத்துதல் மற்றும் பொறுப்பு கூறலில்லாமல் தரவினைக் கயைாளுதல் பொன்ற ஆபத்துக்கள் அதிகரித்திருந்தது. வங்கி குறிப்பிடத்தக்க செயற்பாட்டு நிதி மற்றும் நன்மதிப்பு ஆபத்துக்களிற்கு உள்ளாகின்றது.		
(உ)	**லங்கா பாதுகாப்பு முறைமை தரவு மற்றம் இயக்க முறைமை தற்போதைய கணக்காய்வு பதிவுகள் மேற்கொள்ளப்படாமை** அத்தகைய பதிவுகள் பயனாளர் கணக்கால் செய்யப்படும் செயற்பாடுகளை முகாமையால் கண்காணிக்கவும் பலனை கூறவும் செய்ய முடியாது இது அனுமதிக்கப்படாத அல்லது ஐயத்திற்கிடமான செயல்களை க்கண்டறியப்படாமல் போகும் ஆபததை அதிகரிக்கின்றது. தரவு மற்றும் செயற்பாட்டு முறைமை இரண்டினதும் கணகக்காய்வு பதிவுகள் பயனாளர் செயற்பாடுகளை கண்காணிக்கும் ஐவு சூழிநிலைகளிற்கு பொறுப்பை ஆதரக்கவும் முக்கியமான துப்பறியும் கட்டுப்பாடாக உள்ளது. எனவே, கட்டப்பாட்டு சூழலை வலுப்படுத்தவும் கணனி அணுகுதல் மற்றும் பயன்பாட்டை வினைத்திறனுடன் கண்காணிப்பதை உறுதிபடுத்தவும் இந்தப் செயற்படுததவும் தொடர்ந்து மீளாய்வு செய்யவும் அவசியமாக உள்ளது.	இந்த தரவு மற்றும் செயற்பாட்டு முறைமை கணக்காய்வு பதிவுகளை செயற்படுத்தவதற்கான சாத்தியக்கூறு, புதிய நிலையங்கள் 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.	பயனாளர் செயற்பாடுகளை வினைத்திறனான கண்காணிப்பு மற்றும் பெறுப்பினை உறுதி செய்வதற்கு தரவு மற்றும் செயற்பாட்டு முறைமை கணக்காய்வு பதிவுகள் செயற்படுத்தப்பட்டு தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	**பொதுவான பயனாளர் கணக்குகளின் கிடைப்பனவு தன்மைம- - OMO முறைமை மற்றும் OEBS** OMO முறைமை OEBS முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன. இந்த கணக்ககள் குறிப்பிட்ட பயனாளர் எண்களுடன் இணக்கம் செய்யப்படவில்லை. மற்றும் பொதுவான பெயரில்	இந்த கண்காணிப்பை சரிசெய்யும் ஒரு புதிய OMO முறைமை 2026 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் அமுலாக்கப்பம். பயனாளர் நுழைவு மீளாய்வு 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்படும்.	OMO முறைமை மற்றும் OEBS முறைமையிலுள்ள சகல பொதுவான பயனாளர் கணக்டகுகளும் மீளாய்வு செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட வேண்டும். மேலும் முறையான அனுமதி பெற்று அடையாளம் காணப்பட்ட நபர்களிற்கு மாத்திரம் ஒதுக்கப்படுவதை

பேணப்படுகின்றன. சரியான உரிமை மற்றும் பொறுப்பக்கூறல் செய்யப்படவில்லை. அத்தகைய கணக்குகளின் உள்ளதன்மை மற்றும் அனுமதிக்கப்படாத அல்லது பொருத்தமற்ற கொடுக்கல் வாங்கல்கள் அடையாளம் காணப்பட்டு பயனாளரை கண்டறியும் செயற்திறன் இல்லாது செயற்படுத்தப்படும் ஆபத்தை அதிகரிக்கின்றது. இந்த நிலைமை பொறுப்பினை பலவீனப்படுத்துகின்றது கணக்காய்வு அவதானிப்பகளை பாதிக்கின்றதுடன் வங்கி கணனி நுழைவின் சாத்தியமான தவறான பயன்பாட்டிற்கு உள்ளாக்கின்றது. எனவே, முகாமைத்துவம் பொதுவான பயனாளர் கணக்குகளை உடனடியாக மீளாய்வு செய்து செயலிழக்கச் செய்வது முக்கியமாக உள்ளதுடன் அனைத்து கணனி நுழைவுகளையும் பொருத்தமான அனுமதியுடன் அடையாளம் காணக்கூடிய நபர்களுக்கு ஒதுக்கப்படுவதை உறுதி செய்கின்றது.	உறுதி செய்யப்பட வேண்டும்.

2 நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 274.8 பில்லியன் இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 114.4 பில்லியன் ஆகும். ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 389.2 பில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் பொது உள்நாட்டு கடன் பெறல் தொடர்பில் (DDO) ரூபா 766.4 பில்லியன் நட்டம் ஏற்படல் இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு நாணய நிதிதச் சொத்துக்களிலிருந்து உயர்ந்த வட்டி வீதம் பதிவுசெய்திருந்தது.

2.2 போக்கின் பகுப்பாய்வு

(அ) பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் வங்கியின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளன.

	2024	**2023**	**முரண் [சாகமாது/(பாதகமானது)]**	
	ரூபா பில்	ரூபா பில	ரூபா பில	சதவீதம்
அந்நிய செலாவணி நிதி சொத்துக்கள் மூலம் வருமானம்	**110.5**	**86.2**	**24.3**	**28.2**
வட்டி வருமானம்	45.9	18.0	**27.9**	**155**
கைக்கிட்டாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்து இலாபம்/(நட்டம்)	36.2	29.2	**7**	**24**
கைக்கிட்டிய விலை மாற்றங்களிலிருந்து	28.4	39.0		

இலாபம்/(நட்டம்)			**(10.6)**	**(27.2)**
அந்நியச் செலாவணி நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம்	**83.1**	**142.6**	**(59.5)**	**(41.7)**
வட்டிச் செலவினம்	81.4	142.5	**(61.1)**	**(42.9)**
தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)	**41.4**	**140.1**	**(98.7)**	**(70.4)**
உள்ளூர் நாணய நிதிச் சொத்துக்களிலிருந்து மொத்தத் தேறிய வருமானம்	**227.4**	**(186.4)**	**413.8**	**222**
ஏனைய வருமானம்	1.5	1.6	(0.1)	(6.2)
ஏனைய செலவினம்	0.4	3.5	(3.1)	(88.6)
செயற்பாட்டு செலவினம்	22.5	9.8	12.7	129.6
வரி	-	-	-	-
ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)	**274.8**	**(114.4)**	**389.2**	**340.2**

(ஆ) இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 95 ஆம் பிரிவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான விநியோகிக்கத்தக்க நட்டம் எதிர்மறையான ரூபா 50.63 பில்லியன் இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விநியோகிக்கத்தக்க நட்டம் ரூபா 313.74 பில்லியன் ஆகும். 2024 இல் விநியோகிக்கக்கூடிய இலாபம் எதுவும் இல்லாததால், ஒதுக்கங்களுக்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படுவதில்லை, ரூபா. 15.82 பில்லியனான அரசாங்கக் கடப்பாடுகள் மீளப்பெறப்படவில்லை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கு மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

(இ) வங்கியின் ஐந்தொகை விடயங்களின் பகுப்பாய்வு

(i) வங்கியின் வருடாந்த நிதிக்கூற்றுக்ளின் பிரகாரம் வங்கியின் திறைசேரி உண்டியல்கள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 208 பில்லியனிலிருந்து (புத்தக மதிப்பு) 2024 இல் பூச்சியத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், வங்கியின் திறைசேரி உண்டியல்கள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 1,836 பில்லியனிலிருந்து (புத்தக மதிப்பு) 2024 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா. 1,748.8 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 2023 செப்தெம்பர் 21 இல் உள்நாட்டு கடன் பிரத்தியோகமாக்களின் (DDO) ஒரு பகுதியாக இலங்கை அரசாங்க வங்கியின் தற்காலிக முற்பணங்கள் மற்றும் அரசாங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் முறையே ரூபா. 345 பில்லியன் மற்றும் ரூபா. 2,368 பில்லியன் மறுசீரமைக்கப்பட்டதுடன் று குறைக்கப்பட்ட கூப்பன் வட்டி விவரத்துடன் புதிய திறைசேரி பத்திரங்கள் மற்றும் பில்களாக மாற்றப்பட்டது. DDO இன் கீழ் வங்கியால் பெறப்பட்ட திறைசேரி பில்கள் முதிர்வு திகதிகள் பெப்ரவரி 2024 முதல் செப்டம்பர் 2024 வரை மாறுபடும் முதிர்வு திகதிகளைக் கொண்டிருந்ததுடன். திறைசேரி பத்திரங்கள் 2024 வரை 12.4 சதவீதம் 7.5 சதவீதம் 2026 வரை மற்றும் 2027 முதல் முதிர்வு வரை 5 சதவீதம் வரை முதிர்வுகளைக் கொண்டிருந்தன. 2023 ஆம் ஆண்டில் ஐந்து புதிய கருவிகளின் நியாயமான மதிப்பில் இருந்து கொடுக்கள் வாங்கல் விலை வேறுபட்டதால் மேற்கண்ட மறுசீரமைப்பு ஒரு நாளில் ரூபா. 766.4 பில்லியன் இழப்பை ஏற்படுத்தியது

(ii) வங்கியின் வருடாந்திர நிதிநிலை அறிக்கைகளின்படி, வங்கியின் வெளிநாட்டு சொத்துக்களின் மதிப்பு ரூபா. 294.8 பில்லியனால் அல்லது 17.3 சதவீதம் அதிகரித்து 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 1,998.4 பில்லியனில் இருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதியில்ரூபா. 1,703.6 பில்லியன் ஆகவிருந்தது. வங்கியால் வெளியிடப்பட்ட வாராந்திர பொருளாதார குறிகாட்டிகளின்படி, வங்கியின் நிகர வெளிநாட்டு சொத்துக்கள் 2021 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா. 83.9 பில்லியன் எதிர்மறையான இருப்பு ஆகஸ்ட்

காட்டப்பட்டது. இந்த எதிர்மறை இருப்பு 2022 திசெம்பர் இறுதியில ரூபா. 1,613.9 பில்லியன் ஆக அதிகரித்தது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் இறுதியில் ரூபா 837.3 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது 2024 திசம்பர் இறுதியில் ரூபா. 222 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மேலும், 2025 ஜூலையில் ரூபா 441.4 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு விடயங்கள் மீதான அவதானிப்பு

3.1 செயற்பாட்டு விடயங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**நிதிக் குத்தகை வியாபாரத்தில் ஈடுபட பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை -** இலங்கை மத்திய வங்கியானது (CBSL) செயற்பாட்டு கைநூலின் துறைந்தபட்ட தேவைகளை, குத்தகை தயாரிப்பகள் பற்றிய தகவல்களை வெயியிடுவத்கான குறைந்தபட்ச தரவுகள், கடன் மதிப்பீட்டு அளவுகோள், மீளாய்வு, பொதுவான நிபந்தனைகள் தண்டப்பண கட்டணங்கள், வசதியை மீள் திட்டமிடல் முடிவுறுத்தல் மற்றும் முன்கூட்டியே தீர்வை கட்டணங்களை மற்றும் குத்தகை வியாபாரத்தில் தொடர்புடைய உரிமையை மீட்டெடுத்தல் போன்ற தரவுகளை குறிப்பிட்டு வழிகாட்டல்களை வெளியிடுவதற்கு 2020 இல் ஒத்துக்கொண்டிருந்தது. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை பிரிவு மேற்கூறிய விடங்களை உள்ளடக்கி ஒரு வழிபாட்டுதலை தயாரித்துள்ளது எவ்வாறாயினும் CBSL அத்தகைய வழிகாட்டுதலகளை வெளியிட வேண்டாம் என்று முடிவுசெய்துள்ளது. மேலும் தண்டப்பண கட்டணங்ள் மறறும் முன்கூட்டிய தீர்வை கட்டணங்கள் தவிர 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டத்தில் முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி ஐந்து ஆண்டுகள் கடந்த பின்பும் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தில் முன்மொழியப்பட்ட வழிகாட்டல் திருத்தங்கள் வெளியிடப்படவில்லை அல்லது பின்பற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	நிதிப் பயன்பாட்டாளர் உறவுகள் துறை தாபிக்கப்பட்டதை தொடர்ந்து நுகர்வொர் பாதுகாப்ப முறைமை மேம்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டின் நிதி பயன்பாட்டாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதி இல. 01 வெளியிடப்பட்டது. நிதிச் செவைகள் மற்றும் சேவைகளிற்கான வெளிப்படுத்தல் தெவைகள் கடன் மீட்பு நடைமுறைகள் நடைமுறைகள், முறைப்பாபடுகள் கையாளும் வழிமுறைகள் மற்றும் நிதிச் செவைகளுடனான நியாயமான மற்றும் வெளிப்பயையான ஈடுபாட்டை உறுதி செய்வதற்காக எனைய சிறந்த நடைமுறைகளை இந்த விதி முறைகள் உள்ளடக்குகின்றது. மேலும் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டத்தின் வரைவு திருத்தங்களில் தேவையான இடங்களில் நிதிக் குத்தகை செயற்பாடுகள் பற்றிய முன்மொழியப்பட்ட வழிகாட்டுதலில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை பரிசீலிக்கப்பட வேண்டும்.	நிதிக் குத்தகை நிறுவனங்களிற்காக செயற்பாட்டு கைநூல்கள், வெளிப்படுத்தல் தேவைகள், கடன் மதிப்பீடு, மீளாய்வு பொதுவான நிபந்தனைகள் மற்றும் மீட்பு நடைமுறை பொன்ற குறிப்பிட்ட வழிமுறைகளை இறுதியாக்கப்பட்டு 2000 இன் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். இது ஒழுங்கான மேற்பார்வை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்தும்.

(ஆ) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்டத்தில் செய்யப்பட்ட திருததங்கள் (FLA) – 2020 ஆம் அண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளிற்கு வழங்கப்பட்ட பதிலின் படி நிதிக் குத்தகை சட்ட திருத்தத்தை வரைவதற்கான பிரிவு ஒரு தொழில்நட்ப மற்றம் ஒழுங்குபடுத்தல் குழுவவை நியமித்து பங்குதாரர்களின் அவதானிப்புகளிற்காக சமர்ப்பிப்பதாக கூறப்பட்டது. தி பினாஸ் கவுசஸ் அசோசியேசன் (FHA) மற்றம் இலங்கை லீசிங் ஆசோசியேசன் (LASL) ஆகியவற்றிலிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டன. மேலும் CBSL ஆனது விதிகளை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களைச் செய்யும், மேலும் வஙகியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை பிரிவால் 2024 மே 05 இல் வெளியிடப்பட்ட ஊடக செய்திகுறிப்பின் பிரகாரம் நிதிக் குத்தகை வாடிக்கையாளரின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் தொழிற்துறை வளர்ச்சிக்க ஏற்ப நிதிக் குத்தகைச் சட்டத்தை புதுப்பிப்பதன் அவசியத்தையும் உணர்ந்து இலங்கை மத்திய வங்கி FLA ஐ திருத்த தொடங்கியது. பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனை நடாத்துவதற்காக வரைவு திருததங்கள் தொடர்பான அவதானிப்பகள் / பரிந்துரைகள் / மீளாய்வுகள் 2024 மே 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களிற்கு அழைப்பு விடுத்திருந்தது. எவ்வாறாயினும் இச்த திருத்தங்கள் 2025 ஆகஸ்ட் 31 வரையும் சட்டமாக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மற்றம் நிதிக் கொள்கைகள் குறித்த ஒப்பந்தத்தின் கீழான தேவையகளில் ஒன்றாக 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தில் (BA) திருத்தங்களை செய்வதற்கு இந்த பிரிவு முன்னுரிமையளித்தது. 2026 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின் இறுதிக்குள் குடீயு இல் திருத்தங்கள் இறுதியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பணிகளை விரைவுபடுத்தவும் குடுயு இல் திருத்தங்களை இறுதியாக்கவும் CBSL சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது.

2002 ஆம் ஆணடின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தில் திருத்தங்கள் தொழிற்துறை வளர்ச்சிகளுடன் சரியான நெரத்தில் இணைக்க உறுதி செய்வதற்கும் நிதிகுத்தகை வாடிக்கையாளர்களின் மேம்பட்ட பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் விரைவுபடுத்தவதற்கு உடனடியாக நடவக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) **வங்கியால் பணவீக்க இலக்கினை அடைதல்-** 2023 இன் 16 ஆம் இலக்க மத்திய வங்கி சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியால் அடைய வேண்டிய பணவீக்க இலக்கினை நிர்ணயிப்பது தொடர்பாக

தொடர்ச்சியாக காலாண்டுகளில் பணவிக்கம் 5 சதவீத இலக்கினை விட 2 சதவீத இலக்கிற்கு மேல் குறைவாக இருந்தது. 2023 இன் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சர்

ஒத்துக்கொள்ளப்பட்ட பணவீக்க இலக்குடன் இணங்குவது தொர்ந்து கண்காணிக்கப்ப டுகின்றது. மேலும் பணவியல் கொள்கை முறைமையை

	அமைச்சரும் வங்கியும் ஒரு பணவியல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட வேண்டும். நிதி அமைச்சரும் வங்கியின் ஆளுநரும் 2023 ஒக்தோபர் 3 இல் பணவியல் கொள்கை ஒப்பப்நதத்தில் கையொப்பிமிட்டிருந்தனர் (2023.10.05 ஆந்திகதிய 2352/20 ஆம் இலக்க சாதாரண வர்த்தமாணி அறிவித்தல்) இதன்படி ஒத்தக்கொள்ளப்பட்ட பணவியல் கொள்கை கட்டமைப்ப ஒப்பந்த்த்தின் கீழ் காலாண்டு தலைப்பு பணவீக்க வீதத்தை 5 சதவீத இலக்கில் பேணுவதற்கு வங்கி இலக்காக கொண்டிருக்க வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை + (-) 2 சதவீத புள்ளிகளாகும். இதன்படி 2024 ஆம் ஆண்டின் இறுதி நான்கு காலாண்டுகள் மற்றும் 2025 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர பிரிவால் வெளியிடப்பட்ட தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதங்களிற்கு மாத்திரம் கொழும்பு நுகர்வொர் குறிகாட்டியில் (CCPI) ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றங்களின் எளிய சராசரி முறையே 4.4 சதவீதம், 1.37 சதவீதம், 0.8 சதவீதம், 1.53 சதவீதம், -3.60 சதவீம் மற்றும் -1.10 சதவீதமாக இருந்தது. பணவீக்கம் தொடர்ந்து இரண்டு காலாண்டுகளாக 5 சதவீத இலக்கினை விட 2 சதவீத இலக்கிற்கு மேல் இருந்தமையால் 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது காலண்டிலிரந்து பணவிக்க இலக்கு மீறப்படுவது அவதானிக்க்ப்பட்டது.	மூலம் பணவியல் கொள்கை குழு பாராளுமன்றத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு மற்றும் 2024 ஆம் அண்டின் மூன்றாம் காலண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டின் முதல் காலண்டு ஆகியவற்றினை உள்ளடக்கிய அறிக்கை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவையில் சர்பிகப்பட்டு பின்னர் மத்திய வங்கியின் இணைய தளத்தில் பொதுவில் கிடைத்தன. இந்த அறிக்கைகள் பணவீக்க மீறலிற்கான காரணங்களை முன்மொழந்து தீர்வு நடவடிக்கைகள் மற்றும் இலக்கினை அடைவதற்கான மதிப்பிடப்பட்ட காலக்கெடு என்பவற்றினை சுட்டிக்காட்டி 2025 ஆம் அண்டின் முதல் காலாண்டிற்கான தொடர் அறிக்கை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படடது. மேலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தற்காக நிலுவையில் உள்ளன. அதேநேரம் வெளியிடப்பட்ட அறிக்கைகள் குறித்த மீளமைப்புகள் 2025 சனவரி மற்றும் யூன் மாதங்களில் பொது நிதிக் குழுவிற்கு வழங்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் பணவீக்கம் இலக்கினை விட குறைவாக இருந்தமையால் (08 சதவீதம்) 2025 இன் இரண்டாவது காலாண்டிற்கான அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.	பின்பற்றுவதை உறுதி செய்வதற்கு சரியான நேரத்தில் திருத்த நடவடிக்கைகளை செயற்படுத்தப்பட்டு பாராளுமன்றத்திற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	**நிதி வியாபரத்தை நடாத்தும் அல்லது அனுமதியின் வைப்புத் தொகையை ஏற்றுக்கொள்ளும் நபர்களிற்கு எதிரான நடவடிக்கையின் முன்னேற்றம்-** 2011 இன் 42 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு	நிதிக் குத்தகைச் சட்டத்தின் (FBA) கீழ் நடாத்தப்படும் விசாரணைகள், விசாரணைக்கு உட்பட்ட தரப்பினரதும் அவர்களின் வாடிக்கையாளர் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறவனங்களிடமிருந்து தகவல்களை பெறுவதில் உள்ள சிரமங்கள்	நிதிக் குத்தகைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் விசாரணை நடைமுறைகளை விரைவுபடுத்தப்பட வேண்டும் மற்றும் நிலுவையிலுள்ள

நபர்களும் நிதிக் குத்தகையை மேற்கொண்டாரா அல்லது FBA இன் 2 பிரிவிற்கமைய விதிகளை மீறி பொது மக்களிடம் வைப்புத் தொகையை ஏற்றுக்கொண்டாரா அல்லது ஏற்றுக்கொள்கிறாரா என கண்டறியும் நோக்கத்திற்காக வங்கியில் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைப் பிரிவு பணிப்பாளர் அல்லது பணிப்பாளரால் அதற்காக அனுமதிக்கப்பட்ட வங்கியின் எந்தவொரு அதிகாரியும் விசாரணையை நடாத்தலாம் இதற்காக FBA இல் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கலாம். கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2024 முல் 2025 யூன் 30 வரை பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் நடத்துவதில் முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

விபரம்	2024	2025 (2025.06.30 வரை)
பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகள்	166	133
அனுமதிக்கப்படாத நிதி வியாபாரங்கள்/ எடுக்கப்பட்ட வைப்புக்கள் மீது பெறப்பட்ட முறைபாடுகள்	15	08
அனுமதிக்கப்படாத நிதி வியாபாரங்கள் / எடுக்கப்பட்ட வைப்புககள் மீதான முறைப்பாடுகளில் தொடங்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	15	08
பூர்த்தியாக்கப்பட் விசாரணைகளின் எண்ணிக்கை (2020 இலிருந்து விசாரணைகள் தொடங்கப்பட்டதை உள்ளடக்குகின்றது)	10	09
மொத்த நிலுவை விசாரணைகள் (2020 இலிருந்து நிர்ணயிக்க பட்டவையை உள்ளடக்குகின்றது)	**123**	**121**

மேற்குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் 2025 யூன் 30 இல் உள்ளவாறு மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் ஒருங்கிணைப்பை வேண்டியதன் காரணமாக குறிப்பிடத்கதக தாமதங்கள் ஏற்பட்டது. இந்த தாமதங்கள் குடீயு இன் கீழ் தேவைப்படும் விசாரணைகளை சரியான நேரத்தில் முடிப்பதை தடுகின்றது. இந்த சவால்களை எதிர் கொள்ளவும் FBA இன் 42 ஆம் பிரிவின் கீழ் விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்வும் பிரிவு பல திருத்தங்களை பரிந்துரைத்துள்ளது. அவை தொடர்புடைய ஆலோசனை அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பு 2025 ஒக்தோபரில் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விசாரணைகளை குறைக்கவும் சரியான நேரத்தில் முடிப்பதை உறுதிசெய்யவும் தேவையாள வளங்களை ஒதுக்கப்பட வேண்டும்.

கருத்திற்கொள்ள வேண்டிய எண்ணிக்கயைாக விசாரணைகள் நிலுவையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(உ) **நிதிப் பயன்பாட்டாளர் உறவுகள் பிரிவால் கையாளப்படும் முறைப்பாடுகள் மற்றும் குறைகளின் முன்னேற்றம் -** 1949 இன் 58 ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் நிதிப் பயன்பாட்டாளர் உறவுகள் பிரிவு (FCRD) தாபிக்கப்பட்டது. திருத்தப்பட்டபடி அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் அனுமதிபெற்ற விசெட வங்கிகள் அனுமதிபெற்ற நிதி நிறுவனங்கள் அனுமதிபெற்ற முதன்மை வியாபார்கள் பணம் செலுத்தும் மற்றும் தீர்வை முறைகளில் பங்குபற்வோர் (நிதி நிறுவனஙகள் தவிர) மற்றும் குளோல் மேக்கன்ரைல் ஆசிய-பசுபிக் லங்கா (பிரவேட்) லிமிட்டெட், டயலொக் அசோசியேற் பீஎல்சீ மற்றும் மொபிட்டல் (பிரைவேற்) லிமிட்டெட் போன்ற சில வங்கியல்லாத கட்டணசேவை வழங்குநர்களும் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியால் (CBSL) ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களிற்கு எதிராக நிதிப் பயன்பாட்டாளரால் தாக்கதல் செய்யப்பட்ட சகல வெளிவாரி முறைப்பாடுகளும் பெறப்பட்டு வழங்கப்படுவதற்காக ஒற்றை தொடர்பு புள்ளியாக FCRD செயற்படுகின்றது. சந்தை நிலவரங்களை வெளியிடுதல் மேற்பார்வையிடுதல் உள்நாட்டு மற்றும் சர்வதேச. முன்னேற்றங்கள் மற்றம் சிறந்த நடைமுறைக்கு ஏற்ப நிதிப் பயன்பாட்டாளர் பாதுகாப்பு கொள்கைகளை மீளாய்வு செய்தல், முறைகேடுகள் மற்றும் தவறான நடத்தைகளிற்கு எதிராக முன்கூட்டிய மற்றும் எதிர் நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நிதிப் பயன்பாட்டாளர் பாதுகாப்பு விடயங்களில் அதிகரிக்கும் பாதிப்புக்களை கண்டறிந்து கண்காணித்தல் ஆகியன FCRD இன் பணியாகும்.

முறைப்பாடுகள் அளவு, அவற்றின் சிக்கலான தன்மை, நிதி நிறுவனங்களின் பதில்கள், மற்றும் தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்க எடுக்கும் காலம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நிநயமான விசாரணையை வழங்க வேண்டிய அவசியம் காரணமாக முறைப்பாடுகளை பூர்த்தியாக்க தேவையான காலம் எடக்க வேண்டியது. எவ்வாறாயினும் முறைபபாடுகளை கையாளும் திறனை மேம்படுத்துவதற்கு தொழிநுட்பம் சார்ந்த தீர்வுகளை பயன்படுத்த வங்கி திட்டமிட்டுள்ளது.

முறைப்பாடுகள் கையாள்தல் செயற்பாட்டை விரைவுபடுத்த வேண்டும். மற்றும் நிதிப் பயன்பாட்டாளர் உறவுகள் பிரிவால் தீர்க்கப்பட கூடிய முறைப்பாடுகளை சரியான நெரத்தில் தீர்வு காண்பதை அதிகரிக்க தொழிநுட்பம் சார்ந்த தீர்வுகளை பயன்படுத்த வேண்டும்.

2024 சனவரி முதல் 2025 யூன் 30 வரையான காலத்தின் போது நி பயன்பாட்டாளர் உறவுகள் பிரிவால் கையாளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் குறைகளின் முன்னேற்றம் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டின் பொது பெறப்பட்ட வெளிப்படுத்தக்கூடிய முறைப்பாடுகள் மொததம் 4,926 இல் 2,426 முறைப்பாடுகள் (49 சதவீதம்) 2025 யூன் 30 இல் தீர்க்கப்படாதிருந்தது.

2024 சனவரி முதல் 2025 யூன் 30 வரை

ஆண்டு	பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	மதிப்பிடப்பட்ட் முறைபபாடுகள்	தொடங்கப்பட்ட முறைப்பாடுகள்	தொடங்கப் படாதவை	வெளிப்படுத்திய முறைப்பாடுகளின் சதவீதமாக இறுதியாக்கப்பட்டவை
01.01.2024-31.12.2024	3,374	2,909	1,991	918	68
01.01.2025-30.06.2025	2,363	2,017	509	1,508	25
	5,737	**4,926**	**2,500**	**2,426**	**51**

3.2 நிதிகளின் குறைபயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு

FBA இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி விடயஙகள் குறித்து பொது விழிப்புணர்வை மேம்படுத்துதல் நிதி என்ற ஒரு நிதி இருக்கும் மேலும் குடீயு கீழ் பெறப்பட்ட சகல அபராதஙகளும் நிதிக்கு வரவு வைப்பா்ாட வெண்டும். மேலும் அத்தகைய நிதியின் வரவில் உள்ள பணம் வங்கியில் பணிப்பாளர் சபையால் அவ்வபபோது தீர்மானிக்கும் நோக்ஙகளிற்காக பயன்படுத்தலாம். 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட நிதியின் வரவில் உள்ள தொகை ரூபா 2,795,599 ஆகும். மேலும் இது 2022, 2023, 2024 மற்றும் 2025 யூன் 30 வரையும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

மத்திய வங்கி தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது இந்த விழிப்புணரவு நிகழ்ச்சிகள் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் தொலைககாட்சி, வானொலி நிகழ்சிகள் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மூலம் மத்தியவங்கி நிதிகளை பயன்படுத்தி நடாத்தி வருகின்றது. எவ்வாறாயினும் இந்த நிதியில் உள்ள மீகுதி எதிர்காலத்தில் விரிவான பொது விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஒழுங்குபடுத்த பயன்படுத்தப்படும்.

பரிந்துரைகள்

நிதி விடயங்கள் குறிது பொது விழிப்புணர்வை மேம்படுத்தல், நிதியின் மிகுதி தொகையை பணிப்பாளர் சபையின் வழிநடத்தலிற்கு உட்பட்டு வாடிக்கையாளர் விழிப்பணர்வு திட்டங்களிற்கு உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும். இதனால் நிதி வினைத்திறனாக பயனபடுத்தப்படுவதை உறுதிப்படுத்தப்பட முடியும்.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை மத்திய வங்கியிடம் (CBSL) கொள்வனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் ஒருங்கிணைக்கவும் தனியான கொள்வனவுப் பிரிவு இருக்கவில்லை. 2024 இன் புதிய தேசிய கொள்வனவு வழிகாட்டுதலின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் ஒருங்கிணைக்கவும் பொறுப்பாக தனியான கொள்வனவு பிரிவு அல்லது நிறவனம் அல்லது பிரிவ தாபிக்கப்பட வேண்டுனெ வலியுறத்தப்பட்டுள்ளது. CBSL இல் அத்தகைய பிரிவு இல்லாமை 2024 கொள்வனவு வழியாட்டலின் வேண்டுகையுடன் இணங்காணப்படால் இருப்பதை குறிக்கின்றதுடன் கொள்வனவு நடவடிக்கைகளில் வினைத்திறனான முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை என்பவறினைத் தடுக்கலாம்.	தேசிய கொன்வனவு வழிகாட்டுதல்களின் விதி முறைகளிற்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக தேசிய கொள்வனவு ஆணைக்குழுவுடன் ஆலோசன பெற்று CBSL பல நடவடிக்கைளை எடுத்துள்ளது. 2025.12.31 இற்குள் ஒரு தனி PMD தாபிக்கும் நடவடிக்கையில் CBSL ஈடுபட்டுள்ளது.	புதிய தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்கள் 2024 உடன் இணங்கி யொழுகுவதை உறுதி செய்வதற்கு கொள்வனவு நடவடிக்கைகளின் வினைத்திறனான ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்கும் தனியான கொள்வனவு முகாமைத்துவ குழு தாபிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2025 ஆம் ஆண்டிற்கான CBSL இன் கொள்வனவுகளை 2024 ஆம் ஆண்டின் புதிய தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்களின் 4.1 ஆம் பிரிவுகளின் பிரகரம் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவிலை. மேலும் தொடர்புடைய கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.	வங்கியின் பல பிரிவுகள் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட முறையில் கொள்வனவுகளை CBSL நடாத்தியிருந்தது. எனவே, மையப்படுத்திய பிரிவு அல்லது கால அட்டவணையுடனான கொள்வனவு திட்டம் எதுவும் இருக்கவில்லை. எவ்வாறாயினும், புதிய தேசிய புதிய தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்கள் 2024 இலுள்ள தேவைக்கு ஏற்ப CBSL யைப்படுத்திய கொள்வனவு பிரிவை தாபிக்கம் பணியில் ஈடுபட்டுள்ளது மேலும் CBSL ஆனது கொள்வனவு திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.	புதிய தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்கள் 2024 இன் 4.1 ஆம் பிரிவிற்கமைய கொள்வனவு நடவடிக்கைகளை திட்டமிட தேவையான நடவடிக்கைகள் எடுக்க்பபட வெண்டும்.

4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	திணைக்கள ரீதியான செயற்பாடுகளிலிருந்து 779 பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPls) தரிக்கப்பட்டிருந்த போதிலும் 609 KPls கள் (78 சதவீதம்) மட்டுமே அடையபபட்டிருந்தன. பிரதான நோக்கங்களுடன் தொடர்புடைய சில KPls திட்டமிடப்பட்ட காலப் பகுதிக்குள் அடையப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. KPls அடையாமை செயற்படுத்துவதில் தாமதம் அல்லது வளக் கட்டுப்பாடுகளைக் குறிக்கின்றது எனவும் கருத முடியும். இத்தகைய குறைபாடுகள் செயல் நடவடிக்கை திட்டத்தின் ஒட்டுமொத்த செயல் திறனை மற்றும் ஆரம்ப இலக்குகளை அடைதலைப் பாதிக்கக்கூடும்.	2024 ஆம் ஆண்டில் CBSL சகல பிரிவுகள் சார்ந்த செயல் நடவடிக்கை திட்டங்களும் (DAPs) 799 பரிசீலித்தது. அவற்றில் 10 இற்கும் மேற்பட்டவை சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், CBSL ஆனது பணவீக்க இலகினைத் தவிர அனைத்து குறிகாட்டிகளும் வெற்றிகரமாக பூர்த்தியாக்கியிருந்தது. முக்கிய குறிகாட்டிகளை அடையாதது முதன்மையான CBSL இன் கட்டப்பாட்டிற்கு அப்பால் வெளப்புற காரணிகள் மற்றும் திட்டமிட்ட செயற்பாடுகளிலிருந்து வளங்களை திருப்பிவிடும் அவசரத் தேவைகள் காரணமாகும். கொள்கை மதபிபாய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு (PRMD) முன்னேற்றத்தை கண்காணித்த தாமதங்களிற்கான காரணங்களை கண்டறிந்து முகாமைத்துவத்திற்கு அறிக்கையை சமர்ப்பிக்கின்றது மறறும் தாமதமான நடவடிக்கைகள் முடிவடையும் வரை அடுத்தடுத்த காலாண்டு மீளாய்வுகளில் கண்காணிக்கப்படுவதை உறுதிசெய்கிறது.	பிரிவுகள் வாரியான செயல்நடவடிக்கை திட்டங்கள் மற்றும் மூலோபாய நோக்கங்கள் நரியான நெரத்தில் நிறைவு செய்யப்படுவதை உறிதிப்படுத்தவதற்கு போதுமான வளங்களை ஒதுக்குவதன் மூலம் வெளிப்பற தடைகளை குறறைப்பதன் மூலம் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் அடையப்பாடையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்:டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்கான பிரிவுகள் ரீதியான செயல் நடவடிக்கை திட்டங்கள் செயற்படுத்துவது தொடர்பில் எற்பட்ட முன்னேற்றம் குறித்த பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பல திட்டமிட்ட செயற்பாடுகள் மற்றும் பிரதான செயலாற்றல் (KPls) அடையப்பட்டிருகாமை செயலாற்றல் தறைனை தடுப்பது, உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொழில்நுட்ப மேம்பாடுகளை தாமதப்படுத்துவது மற்றும் பல்வேறு துறைகளில் மூலோபாய நோககங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும்		

	மேம்பாடுகளை அடைதலை தடுப்பது உள்ளடங்கலாக சாத்தியமான விளைவுகளை ஏறபடுத்தியிருந்தது.		
(i)	நாணய மீட்பு மற்றும் விநியோகப் (CRD) எதிர்நோக்கும் செய்பாட்டு ஆபத்துக்களை குறைப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் நொக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு சேவை செய்ய வேண்டிய நாணய கட்டுப்பாடுகளின் கண்காணிப்பு முறைமையை அறிமுகப்படுத்தும் செவை திட்டமிட்ட நடவடிக்கையை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலேயே தடுக்கப்படவில்லை. இது உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனான செயற்பாட்டு ஆபத்துக்களை கண்காணித்த முகாமை செய்யும் திறனை மட்டுப்படுத்தியிருந்தது.	CBSL ஆனது பார்கோட்டப பொறி முறையை பயன்படுத்தி சகல நாணயக் கட்டுகளையும் கண்காணிப்பதற்கான பார்கோட்டு பொறிமுறையை பயன்படுத்தி சகல சேவை செய்யக்கூடிய நாணய கட்டக்களையும் ஆனது பார்கோட்டு பொறிமுறையை பயன்படுத்தி சகல நாணயக் கட்டுக்கள் மீது கண்காணப்பு முறைமையை வெற்றிகரமான செயற்படுத்தியுள்ளது. இது கட்டக்களை அடையாளம் காணல் மற்றும் கண்காணிப்பின் துல்லியம் செயலாற்றலை கணிசமானளவு மேம்படுத்துகின்றது. தற்போது இந்த முறைமை எக்செல் அடிப்படையில் முகாமை செய்யப்படுகின்றது. கட்டு விபரங்கள் பார்கோட்டு தரவு மற்றும் இயக்க வரலாற்றை படம் பிடிக்கும் ஒரு மையமாக செயற்படுகின்றது. அதிக செயற்றிறன் மற்றும் குறைக்கப்பட்ட கையேடு வேலைச் சுமைக்கான திறனை உணர்ந்து வங்கி தற்பொதுள்ள தொழில்நுட்ப உதவியுடன் இந்த பார்க்கோடு கண்காணிப்பு செயன்முறையினை தானியத்தை மீளாய்வு செய்து வருகின்றது.	பதப்படுத்தப்பட்ட சேவை செய்யக்கூடிய நாணயத் தொகுப்புக்களிற்காக பார்கோடு கண்காணிப்பு முறைமை உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும் செயற்பாட்டு ஆபத்துக்களை கண்காணிப்பதை மேம்படுத்தவும் தேவைவான தொழில்நுட்ப உதவியுடன் முழுமையாக தானியங்கப்பட வேண்டும்.
(ii)	நிதித்துறை பாதுகாப்பு வலைத்திட்டம் செயலாற்றல் (FSSNP) அடிப்படையிலான கூறுகளை அடைவதோடு (PBCs) பிரிவின் செயற்பாடுகள் பொது விழிப்புணர்வை மேம்படுத்துதல் நிதித்துறை பாதுகாப்பு வலையமைப்பு நடவடிக்கைகள் விழிப்புணர்வை அளவிடுதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற (i) முக்கிய செயற்பாட்டு குறிகாட்டியுடன் (KPI) மற்றும் (ii) மேற்பார்வை செயற்பாட்டிற்கு ஒரு SupTech தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு KPI உடன் தனித்துவமான அடையாள எண்ணின் (UIN) கீழ் வைப்புத் தொகை	2024 ஏப்ரல் 3 முதல் அமுலுக்குவரும் நிதித்துறை பாதுகாப்பு தேறிய வலுப்படுத்தல் திட்டத்தில் (FSSNP) வைப்புத் தொகை பாதுகாப்பில் பொது விழிப்புணர்வை அளவிடுவதற்கும் முன்னேற்றுவதற்கும் விழிப்புணர்வு கணக்கெடுப்பு நிறுவனம் 2025 திசெம்பரில் திருத்தப்பட்ட WB கால எல்லைக்கு எற்ப கள அய்வுகளை நடாத்தி வருகின்றது. பொது விழப்புணர்வு நீடிக்கப்பட்ட மதிப்பாய்வு செயல்முறை மற்றும் தரவு துல்லியத்தை உறுதி செய்ய வேண்டிய அவசியம் காரணமாக கணக்கெடுப்பை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. அதேவேளை	FSSNP இன் கீழ் திட்டமிடபபட்ட செயற்பாடுகளை விரைவு படுத்தவும் DWDCS ஐ முழுமையாக செயற்படுத்துவதறகு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். இதனால் நோக்கங்களை சரியான நேரத்தில் அடைய முடிந்தது.

	வாரியான தரவு சேகரிப்பு முறைமையை DWDCS உருவாக்குவதன் மூலம் தொழில்நுட்ப முன்னேற்றங்களை மேற்பார்வையின் செயலாற்றல் மேம்படுத்தல் போன்ற திட்டமிட்ட நடவடிக்கைகளை மீளாய்வாண்டில் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் மேர்பார்வை பொது விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்ப முன்னெற்றத்தில் முன்னேற்ங்கள் குறைவாக இருக்கும்.	2025 செப்தெம்பர் 30 இல் மீண்டும் வளம்பரம் வெளியிடப்பட்ட போது விழிப்புணர்வு ஆலோசனை கொள்வனவு நடைபெறுகின்றது. PBC ஐ நிறைவேற்ற விழிப்புணர்வு பிரச்சாரங்களை செயற்படுத்த இரண்டு செயற்பாடுகளும் நிபந்தனைகளாகும். வைப்புத் தொகை வாரியாக தரவு சேகரிப்பு அமைப்பிக் (DWDCS) பரிசொதனை ஓட்டங்கள் அனைத்தம் 32 அனுமதிபெற்ற நிதி நிறுவனங்களிற்கும் 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இறுதியாக்கபப்பட்டு பின்னர் அனுமதி பெற்ற வங்கிகளிற்கும் நீடிக்கப்பட்டது. சில வங்கிகள் தரவு சமர்ப்பிப்தில் மொழில்நுட்ப சிக்கல்களை எதிர்நோக்கியது. CBSL ஆனது அவற்றுடன் ஒன்றிணைந்து இதனை சரி செய்கிறது. இதற்கு இணையாக SLDIS ஒரு IT உட்கட்டமைப்பின் இடைவெளி பகுப்பாய்வை நடாத்துவதற்கும் DWDCS இல் முன்னேற்றங்களை பரிந்துரைப்பதற்கும் அல்லது விரிவான முகாமைத்துவ தகவல் முறைமையை தாபிப்பதற்கும் FSSNP இன் கீழ் ஒரு IT ஆலேசனையாளரை ஈடுபடுத்த CBSL தொடங்கியிருந்தது.	
(iii)	பல்வேறு பங்குதாரர்களால் நிதி, கல்வி, திட்டங்களிற்கு பயன்படுத்தப்படும் உள்ளடக்கத்தில் சீரான தன்மையை நிறுவும் நோக்த்துடன் சகல பங்குதாரர்களிற்கும் பொதுவான மற்றும் எளிதில் அணுகக்கூடிய இணைய தளத்தை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல் பொன்ற திட்டமிட்ட செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு அவ்வாண்டிலேயே நிறைவேற்றப்படவில்லை. இது நிதி கல்வி முயற்சிகளின் வினைத்திறனை மட்டுப்படுத்தியிருக்கலாம்.	திட்டமிட்ட செயற்பாடு JICA இன் நிதியளிப்படன் நடாத்தப்படவிருந்தது. மேலும் இணைய தள மேம்பாட்டு திட்டத்திற்கு ஆதரவளிக்க இயலாமையை அவர்கள் தெரிவித்திருந்தனர். தளத்தின் மேமபாடு தொடர முடியும் என்பதை உறுதி செய்வதற்காக மாற்றப்பட்ட கால நீடிப்பு இந்த முயற்சியை மேற்கொள்வதற்கு சாத்தியமான வழிகளை ஆராயும்.	நிதி, கல்வி, திட்டங்களின் சீரான தன்மை மற்றும் செல்திறனை உறுதி செய்வதற்கு சகல பங்குதாரர்களிற்கும் பொதுவான இணைய தளத்தை தாபித்து புதுப்பிக்க தேவைான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும்.

(iv)	திறமையான மற்றும் வலுவான கணனிச் சூழலில் பங்குதாரருக்க மேமபட்ட செவைலய வழங்கும் நொகக்த்துடன் மேற்கொள்ளப்பட்ட தேவைகள் பகுப்பாய்வை நிறைவு செய்வதிலிருந்து தொடங்கி ஸரெப் டவுன் மல்டிபிள் பிக்ஸ்ட் கூப்பன் பிரிவுகளின் முதன்மை வெளியீட்டை எளிதாக்கம் வகையில் வலையமைப்பு அடிப்படையில் மூலப் பத்திர வெளியீட்டு முறையை விரிவுபடுத்தும் திட்மிட்ட நடவடிக்கை நிறை வேற்றப்படவில்லை. இது மூல நடவடிக்கைகளின் தொழில்நுட்ப மேம்பாடுகளை தாமதப்படுத்தியிருக்கலாம்.	2024 ஆம் அண்டில் பொதுக் கடன் முகாமைத்தவச் சட்டம் உருவாக்கப்பட்டதன் மூலம் கடன் முகாமைத்துவ அலுவலகம் தாபிக்கப்பட்டது. எனவெ, கடன் முகாமைத்துவ CBSL இலிருந்து பொதுக் கடன் முகாமைததுவ அலுவலகத்திற்கு (PDMO) மாறுதல் காலத்தில் இருந்தது. இடைக்காலத்திற்கு PDMO ஆல் தற்பொது கேள்வி முறையை பயன்படுத்தவும் பின்னர் விரைவில் தேவையான விடயஙகளுடன் புதிய முழுமையான கேள்வி முறையை வங்கவும் PDMO முடிவு செய்தது. மேற் கூறியவற்றினைக் கருத்திற்கொண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் விரிவான பரிசோதனை தேவைப்படும் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருககவில்லை.	மூல நடவடிக்கைகளில் சரியான நேரத்தில் தொழில்நுட்ப மேம்பாடுகளை உறுதீ செய்வதற்கு இணைதள அடிப்படையிலான மூலப் பத்திர வெளியீட்டு முறைமையின் விரிவாக்கத்தினை விரைவுபடுத்த அல்லது முழுமையான விடயங்களுடன் புதிய கேள்வி முறையை செயறபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.